# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2234/49 - 2021 ජූලි මස 02 වැනි සිකුරාදා - 2021.07.02

*2234/49 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

*22 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்,*

(i) *2021, பெப்புருவரி மாதம் 3 ஆந் திகதியிடப்பட்ட 2213/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் (இதனகத்துப்பின்னர் "2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணையின் பகுதி I இல் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையிலுள்ள ஏதேனும் சொத்திலிருந்து (அசையக்கூடிய, அசையாத, உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் அடங்கலாக) தேறிய நிதியங்களாகவிருக்கின்ற, உடனடிக் குடும்ப உறுப்பினரொருவரிடமிருந்து புலம்பெயர்ந்த ஒருவரினால் பண அன்பளிப்புக்களாகப் பெறப்பட்ட நிதியங்களிலிருந்து புலம்பெயர் முற்கொடுப்பனவின் கீழ் நிதியங்களை சொந்த நாட்டுக்கு அனுப்புவதை இடைநிறுத்துகின்றேன்.*

(ii) *இக்கட்டளையின் திகதியிலிருந்து இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் ஏற்கனவே புலம்பெயர் முற்கொடுப்பனவினைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாய்க் கணக்குகளூடாக புலம்பெயர் முற்கொடுப்பனவின் கீழ் நிதியங்களைச் சொந்த நாட்டிற்குத் திருப்பியனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.*

(iii) *இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் புலம்பெயர் முற்கொடுப்பனவினை முதற் தடவையாகக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடைய புலம்பெயர் முற்கொடுப்பனவினை உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.*

(iv) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாய்க் கணக்குகள் அல்லது புலம்பெயர்ந்தவர்களின் பணவனுப்பத்தக்க வருமானக் கணக்குகள் ஊடாக புலம்பெயர்ந்தவர்களினால் ஏதேனும் நடப்பு வருமானத்தினை அல்லது திரண்ட நடப்பு வருமானத்தினை (ஊழிய சேமலாப நிதியம், ஊழிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியங்கள் அல்லது வேறு ஏதேனும் ஓய்வு நலன்கள் அடங்கலாக) சொந்த நாட்டிற்கு அனுப்புவதை உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(v) 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற அத்துடன் வேறொரு நாடொன்றில் தற்காலிக வதிவிட வீசாவைப் பெற்றுக்கொண்டுள்ள எவரேனும் தனிப்பட்ட இலங்கையருக்கான வெளிமுகப் பணவனுப்பல்களை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(vi) 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 3 ஆந் திகதியிடப்பட்ட 2213/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் வேறொரு நாட்டின் தற்காலிக வீசாவின் கீழ் இலங்கையிலிருந்து வெளிச்செல்வதற்கு உத்தேசிக்கின்ற இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆளுக்கான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலை ஆளொருவருக்கு உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 10,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(vii) 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 3 ஆந் திகதியிடப்பட்ட 2213/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் அட்டவணையில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பின்வருவன நீங்கலாக, வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்துகின்றேன்.

(அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனொன்றிலிருந்து நிதியளிக்கப்படவுள்ள முதலீடுகள், அல்லது

(ஆ) சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கி முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடு மீது பிரயோகிக்கப்படக்கூடிய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தலினை நிறைவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று, அல்லது

(இ) முதலீட்டினைப் பெறுபவரின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் நோக்கத்திற்காக, உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 15,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட/ தாபிக்கப்பட்ட ஏற்கனவே தாபிக்கப்பட்ட துணை நிறுவனங்களில் அல்லது கிளை அலுவலகங்களில் தகைமையுடைய வதியும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படவுள்ள நிதியங்களின் மேலதிக முதலீடு/ மேலதிக உட்செலுத்தல் (ஏற்புடையவாறு), அல்லது

(ஈ) தகைமையுடைய வதியும் கம்பனிகளால் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு வெளிநாட்டில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட தொடர்புபடுத்தல், சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு ஏதேனும் அதனையொத்த அலுவலகங்களின் பராமரிப்பு நோக்கத்திற்காக உயர்ந்தபட்ச ஐ. அ. டொலர் 30,000 அல்லது ஏதேனும் வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரையான பணவனுப்பல்கள்,

ஆயின், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர் அத்தகைய தேவைப்படுத்தலினை நிறைவுசெய்தல் பற்றி திருப்தியடைய வேண்டும்.

(viii) இக்கட்டளை செயற்பாட்டிலுள்ள காலத்தின் போது, இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது/அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடாக மூலதனக் கொடுக்கல் வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ. அ. டொலர் 20,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்.

(ix) 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7(10) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு நாணயச் சபை அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயின்,

(அ) முன்மொழியப்பட்ட முதலீடானது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் ஒன்றிலிருந்து நிதியளிக்கப்படுவதாக இருத்தல், அல்லது

(ஆ) முன்மொழியப்பட்ட முதலீடானது சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளை அலுவலகமொன்றில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடு மீது ஏற்புடைய அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருத்தல்.

இக்கட்டளையானது, இக்கட்டளையின் திகதியிலிருந்து 6 மாத காலப் பகுதிக்கு செல்லுபடியானதாகும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

கொழும்பு,
2021, யூன் 30.

07-178